**திஸ்ஸமஹாராம பிரதேச சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 11 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருமு: அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கும் ஆயுர்வேத வைத்தியருக்கும் நிலுவைச் சம்பளம் செலுத்தும்போது 2013 ஆம் ஆண்டிற்குரியதாகச் செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் விதவைகள், அநாதைகள் நிதியங்களின் கூட்டுமொத்தம் ரூபா 119,028 தொகை மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்காகவும் மீளாய்வாண்டின் இறுதியளவில் மேலும் செலுத்த

வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 137,219 சம்பளம் மற்றும் விதவைகள் அநாதைகள் நிதியம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குக் சொந்தமான கற்குழியை வாடகைக்குப் பெற்றவரிடமிருந்து சபைக்கு அறவிடவேண்டிய ரூபா 443,996 தொகையான வாடகைப் பணம், ரூபா 12,100 தொகையான தாமதத் தண்டப் பணம், ரூபா 2,420 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் விரிப்பணம் மற்றும் ரூபா 151,176 தொகையான மின்சாரப்பட்டியல் கட்டணம் என ரூபா 609,692 கூட்டுமொத்தத் தொகையில் ரூபா 336,475 மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) நன்கொடையாக பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற 09 வாகனங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான ரூபா 652,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்றிற்காக கெப் வண்டியொன்றை பதிலீடாக மாற்றியிருந்த போதிலும் பழைய வாகனம் சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டு புதிய வாகனத்தின் பெறுமதியை மூலதனமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் வேலை பூர்த்திசெய்யப்பட்ட ரூபா 3,930,280 தொகையான உத்தகந்தற கழிவுகளை அடுக்கும் நிலையத்தின் நிர்மாணம் மற்றும் ரூபா 110,285 தொகையான பொது நூலகங்களின் மலசலகூடத்தை நிர்மாணித்தின் பெறுமதி என்பவற்றை மூலதனமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்குரிய நிலையான வைப்புகளுக்காக 2013 யூலை 02 ஆந் திகதி முதல் 2014 சனவரி 02 ஆந் திகதி வரையான 06 மாத காலப்பகுதிக்காகக் கிடைத்திருந்த ரூபா 86,250 தொகையான வட்டித்தொகை இது காசுக் கணக்கில் வைக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மேலும் 02 நிலையான வைப்புக்களுக்காக கிடைத்திருந்த வட்டித்தொகையில் ரூபா 76,389 தொகை 2013 ஆம் ஆண்டிற்குரியதாக இருந்த போதிலும் அம்மொத்த வருமானமும் ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,608,934 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 55,221 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| i. | வீதவரியும் வரியும் | 1,950 | 2,395 | 3,527 |
| ii. | வாடகை | 8,132 | 8,301 | 1,530 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 8,012 | 10,196 | 782 |
| iv. | ஏனைய வருமானம் | 50,229 | 46,090 | 8,785 |

### 2.2.2 ஆதனவரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரித் தொகையான ரூபா 3,517,208 இனை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகை

----------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 177 இன் பிரகாரம் பன்னேகமுவ மற்றும் தெபரவெவ வாராந்த சந்தையின் கேள்விகோரப்பட்டு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய கடைகளிலிருந்து உரிய பிரகாரம் வாடகைப் பணம் அறவிடப்படாதிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகைப் பணம் ரூபா 1,472,794 இனை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கற்குழியை வாடகைக்கு வழங்குவதற்காக 07 மாத கால எல்லைக்காக வாடகையாளரிடமிருந்து அறவிட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 443,996 ஆக இருந்துதடன் அந்நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

----------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்களின் பெறுமதியான ரூபா 782,273 இனை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152(4) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏனைய வருமானம்

-----------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் அறிவித்தல் பதாதைக் கட்டணம், கலி பவுசர் வருமானம் மற்றும் இயந்திர உபகரண வருமானமாக ரூபா 326,521 கூட்டுத்தொகையான வருமானம் அறவிட வேண்டியிருந்தது.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

தென் மாகாணசபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,800,678 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும் கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) காணி மற்றும் கட்டிடங்களின் மெய்மையாய்வு**

1988 இன் பிரதேச சபையின் நிதி மற்றும் நிர்வாக விதிக்கோவையின் விதி 218 இன் பிரகாரம் சபைக்குரிய சகல காணியும் கட்டிடங்களும் வருடத்திற்கு ஒரு முறை மெய்மைாய்வு செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பொருள் மெய்மையாய்வு**

2014 இன் பொருள் மெய்மையாய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட 127 பொருள் வகைகளுக்குரிய 1357 அலகுகளின் பற்றாக்குறையொன்று தொடர்பாக 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 204 இன் பிரகாரம் 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ)) ஊழியர் கடன்**

தற்போது சேவையிலில்லாத ஐந்து ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கிருந்த ரூபா 105,030 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பல்நோக்கு நடமாடும் கூடாரம்**

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் 2013 இன் பாதீட்டு முன்மொழிவின் மூலம் அமுல்படுத்தப்பட்ட வறுமையைக் குறைக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 270,000 பெறுமதியான 10 கூடாரங்கள் சபைக்குக் கிடைத்திருந்ததுடன் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அதில் 07 கூடாரங்கள் சபையின் இடர் முகாமைத்துவப் பிரிவில் காணப்பட்டதுடன் எஞ்சிய 03 கூடாரங்கள் தொடர்பான எத்தகவலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

i. உள்ளூராட்சி நிறுவனங்களின் சேவையை விரிவுபடுத்துவதற்காக உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சிற்கு ரூபா 1,310,856 பெறுமதியான 1184 கொடிக்கம்பங்கள் (GI குழாய்) 2014 நவம்பர் 15 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும் அந்தக் கொடிக்கம்பங்களின் எண்ணிக்கை பொருட்பதிவேட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

ii. இந்தக் கொடிக்கம்பங்களிலிருந்து ரூபா 203,714 பெறுமதியான 184 கொடிக்கம்பங்கள் அம்பாந்தோட்டை பிரதேச சபைக்கும், ரூபா 115,142 பெறுமதியான 104 கொடிக்கம்பங்கள் அம்பலந்தொட்ட பிரதேச சபைக்கும் வழங்கப்பட்டமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அளவு குழாய் அச் சபையிலிருந்து கிடைத்திருக்கவில்லை. அம்பாந்தோட்டை மாநகர சபைக்காக ரூபா 141,714 பெறுமதியான 128 கொடிக்கம்பங்கள் வழங்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 66,428 பெறுமதியான 60 கொடிக்கம்பங்கள் அம்பாந்தோட்டை மாநகர சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

## 3.3 விளைவற்ற சொத்துக்கள்

துணி தைக்கும் உபகரண தொகுதியொன்று, இரண்டு மோட்டார் படகுகள், உடற்பயிற்சி உபகரணங்களின் தொகுதியொன்று மற்றும் உள்ளக இணைப்பு சிறுகொங்கிரீட் கல் உற்பத்தி இயந்திரம் போன்ற சொத்துக்கள் நீண்ட காலம் முதல்

விளைவற்று காணப்பட்டதுடன் அச்சொத்துக்களை பாவனைக்கு எடுப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

### (அ) கொங்கிரீட் கல் மற்றும் கற்தூன் போக்குவரத்து

---------------------------------------------------------------------------------

பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சுச் செயலாளரின் 2014 யூலை 02 ஆந் திகதிய MPH/HYW/MNG/Cer/14-1 ஆம் இலக்க கடிதத்தின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வீதிகளுக்காக மூலப்பொருட்களைப் போக்குவரத்துச் செய்யும் போது மூலப்பொருளின் அடிப்படையில் சேர்க்கப்படுகின்ற 10 சதவீத மேலதிக கிரயம் சேர்க்கப்படாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 யூலை 02 ஆந் திகதியின் பின்னர் சபையினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அமுல்படுத்தப்பட்ட 10 வேலைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் ரூபா 59,150 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### (ஆ) வடிவமைப்பு வேலைக்காக மேலதிகக் கொடுப்பனவு

---------------------------------------------------------------------------------------

மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 31 வேலைகளுக்கான கொடுப்பனவு அறிக்கைகளைத் தயாரிக்கும் போது வடிவமைப்பு சேவைக்காகச் செலுத்தவேண்டிய தொகையைவிட மேலதிகமான தொகை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதன் கரணமாக ரூபா 242,767 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### (இ) வேலைகளின் பௌதீக பரீட்சிப்பு

-------------------------------------------------------

சபையினால் அமுல்படுத்தப்பட்ட சில வேலைகள் தொடர்பாக 2015 மார்ச் 31 மற்றும் ஏப்ரல் 02 ஆகிய இரு தினங்களிலும் மேற்கொள்ளப்பட்ட பௌதீக

பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(i) அந்தரகஸ்யாய விளையாட்டு மைதானத்திற்கு அருகில் வாய்க்கால் வீதி அபிவிருத்தி**

----------------------------------------------------------------------------------------------------------------------

அந்தரகஸ்யாய விளையாட்டு மைதானத்திற்கு அருகிலுள்ள வாய்க்கால் வீதியை அபிவிருத்தி செய்யும் வேலை ரூபா 1,972,541 உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்கு கையளிக்கப்பட்டு நிறைவேற்றி ரூபா 1,954,929 தொகையான கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டு மீளளிப்பிற்காக அனுப்பப்பட்டிருந்தது. 187 மீற்றர் நீளத்தில் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீதியில் 4 அங்குல உயரத்தில் ABC கலவை இட்டு நீருடன் வீதிச் செப்பனிடுகையின் மூலம் செப்பனிட்டு வீதியை தடிப்பமாக்குவதற்காக ரூபா 280,921 தொகையொன்று கொடுப்பனவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த வீதியின் 30 மீற்றரில், 30 அளவிலான 06 இடங்கள் பரீட்சிக்கப்பட்டதுடன் அதில் ஒரு இடத்தில் மாத்திரம் ABC கலவை ஒரு சிறிய அளவில் காணப்பட்டதுடன் ஏனைய ஐந்து இடங்களிலும் கல்தூள் மாத்திரம் வீதியின் அடியில் போடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கொடுப்பனவு அறிக்கையில் காணப்படுகின்ற முறையில் வீதியின் அடியில் ABC கலவை காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

**(ii) வீதிகளில் ABC கலவை மற்றும் கற்தூள் உரிய அளவில் பயன்படுத்தப்படாமை**

----------------------------------------------------------------------------------------------------------------

11 வேலைகளுக்காக வீதியின் அடியில் 4 அங்குல தடிப்பத்தில் ABC இட்டு நீரைப் பயன்படுத்தி மட்டப்படுத்தப்பட்டதன் பின்னர் 3 அங்குலம் காணப்பட்டதாகவும் ABC படைக்கு சுற்றிவர கற்தூள் 2 அங்குல தடிப்பதத்தில் இடப்பட்டதாகவும் கொடுப்பனவு அறிக்கையில் காணபிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ABC மற்றும் கற்தூள் படையின் மொத்தத் தடிப்பமும் 5 அங்குலமாக இருக்கவேண்டிய போதிலும் பௌதீக பரிசோதனையின் போது இந்த வீதிக்காக பயன்படுத்தப்பட்ட ABC கலவை மற்றும் கற்தூள் படையின் சராசரியான தடிப்பம் 3.25 – 4.29 அங்குலம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**(iii) திஸ்ஸபுற 1 ஆவது ஒழுங்கையின் 1 ஆம் கட்ட அபிவிருத்தி**

-----------------------------------------------------------------------------------------------------------------

திஸ்ஸபுற 1 ஆவது ஒழுங்கையின் 1 ஆம் கட்ட அபிவிருத்தி வேலை ரூபா 500,000 உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்கு கையளிக்கப்பட்டு நிறைவேற்றி ரூபா 499,986 தொகையான கொடுப்பனவு அறிக்கையொன்று தயாரித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 72 மீற்றர் நீளத்திலும் 3.0 மீற்றர் அகலத்திலும் 02 அங்குல உயரத்திலும் வீதியின் அடிப்பகுதியில் கற்துாள் போடப்பட்டதாகக் காண்பித்து கற்துாள் 10.8 சதுர கன மீற்றருக்காக ரூபா 26,643 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், வீதியின் 18 ஆவது மீற்றரில் 18 அளவிலான 4 இடங்களில் பரீட்சித்த போது 02 அங்குல தடிப்பத்தில் கற்துாள் போடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. கற்துாள் படையின் சராசரி தடிப்பு 0.975 அங்குலமாக இருந்தமையும் அதன் பிரகாரம் கற்துாள் இற்காகச் செலுத்தவேண்டிய தொகை ரூபா 11,650 ஆக இருந்த போதிலும் ரூபா 26,643 தொகை செலுத்தப்பட்டமையினால் ரூபா 14,993 தொகையொன்று மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(iv) வீதியோரங்கள் உரிய பிரகாரம் அமைக்கப்படாமை**

-----------------------------------------------------------------------------------

i. 04 வேலைகளுக்காக வீதியின் இருபக்க ஓரங்களுக்காகவும் மண் போட்டு நீர் இட்டு செப்பனிட்டதாகக் காண்பித்து ரூபா 245,836 தொகை கொடுப்பனவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனையின் போது வீதி நிர்மாணிக்கப்பட்டுள்ள இடத்திற்கு அருகிலுள்ள காணி உரிமையாளரின் எல்லை வேலி அமைக்கப்பட்டிருந்தமை, வீதியின் இரண்டு பக்கமும் வடி காண் அமைக்கப்பட்டமை மற்றும் வீதியின் இரண்டு பக்கமும் வயல்வெளி காணப்பட்டமை போன்ற விடயங்களின் காரணமாக வீதியின் ஓரங்களுக்காக மண் போடவேண்டிய தேவையொன்று காணப்படாதிருந்தமையும் அதனால் மண் போடப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

ii. 08 வேலைகளுக்காக ரூபா 498,246 கூட்டுத்தொகையொன்று வீதியோரங்களுக்காக மண் போட்டு நீர் இட்டு தடிப்பமாக்குவதற்காக 303.75 கன மீற்றருக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், பௌதீக பரிசோதனையின் போது கொடுப்பளவு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அளவில் மண் வழங்கப்படாதிருந்தமையும் 129.68 கன மீற்றர் அளவு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டதுடன், இதில் எந்த வேலைக்காகவும் நீர் இட்டு மட்டப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(v) கொங்கிரீட் தட்டு உரிய பிரகாரம் நிர்மாணிக்கப்படாமை**

---------------------------------------------------------------------------------------------

07 வேலைகளுக்காக வீதிகளின் இருபக்கமும் 06 அங்குல அகலத்திலும் 09 அங்குல உயரத்திலும் கொங்கிரீட் தட்டு நிர்மாணிக்கப்பட்டதாகக் காண்பித்து கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பௌதீக பரிசோதனையின் போது அவ்வாறு கொங்கிரீட் தட்டு நிர்மாணிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் கொங்கிரீட் தட்டிற்காக ரூபா 357,777 தொகை மேலதிகக் கொடுப்பனவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(vi) பெயர்ப்பலகை பொருத்தப்படாமை**

-----------------------------------------------------------

பிரதேச சபையின் மூலம் அமுல்படுத்தப்பட்ட 11 வேலைகளுக்காக 600X900 மி.மீற்றர் அளவில் 11 பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டதாககக் காண்பித்து ஒன்றிற்கு ரூபா 6,000 வீதம் ரூபா 66,000 கூட்டுமொத்தக் கொடுப்பனவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் பௌதீக பரிசோதனையின் போது பெயர்ப்பலகை வழங்கி பொருத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(vi) கொங்கிரீட் தட்டிற்காக இருப்புக் கம்பி பயன்படுத்தி பலப்படுத்துதல்**

---

வீதியின் இருபக்கமும் கொங்கிரீட் படைக்காக 10 மி.மீற்றர் அளவில் கம்பி பயன்படுத்தப்பட்டதாக காண்பித்து உடுவில மத்திய வீதிக்காக ரூபா 52.925 தொகையும் மோலகெப்பு பதான பாடசாலை வீதியை குளம் வரை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 52,925 தொகையும் கொடுப்பனவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனையின் போது உடுவில மத்திய வீதியில் கொங்கிரீட் தட்டுச் சுவரில் ஒரு இடம் பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் அந்த இடத்தில் கம்பி போடப்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. மோலகெப்பு பதான பாடசாலை வீதியின் குளம் வரை அபிவிருத்தி செய்யும் வேலையில் கொங்கிரீட் தட்டுச் சுவரில் 03 இடங்கள் பரீட்சிக்கப்பட்டதுடன் அதில் ஒரு இடத்தில் கம்பி போடப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்தக்கள் முகாமைத்துவம்
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) ஊழியர் கடன் நிர்வாகம்
(உ) வாகனப் பராமரிப்பும் நிர்வாகமும்